செ.வெ.எண்: 100 நாள்: 12.02.2020

**கும்பகோணம் வட்டம் இஞ்சிகொல்லை கிராமத்தில் நடைபெற்ற மக்கள் நேர்காணல் முகாமில் 130 பயனாளிகளுக்கு ரூபாய் 13.61 லட்சம் மதிப்பீட்டிலான நலத்திட்ட உதவிகளை மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.ம.கோவிந்த ராவ் இஆப., அவர்கள் வழங்கினார்**

தஞ்சாவூர் மாவட்டம், கும்பகோணம் வட்டம் இஞ்சிகொல்லை கிராமத்தில் இன்று(12.02.2020) நடைபெற்ற மக்கள் நேர்காணல் முகாமில் 130 பயனாளிகளுக்கு ரூபாய் 13.61 லட்சம் மதிப்பீட்டிலான நலத்திட்ட உதவிகளை மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.ம.கோவிந்த ராவ் இஆப., அவர்கள் வழங்கினார்.

வருவாய்த்துறை சார்பில் 21 பயனாளிகளுக்கு தலா ரூபாய் 30000 விதம் ரூபாய் 6,30,000 மதிப்பீட்டில் இலவச வீட்டுமனைப்பட்டாக்கள், 13 பயனாளிகளுக்கு ரூபாய் 1,14,000 திருமண உதவித்தொகை, 22 பயனாளிகளுக்கு ரூபாய் 4,82,000 இறப்பு நிவாரணத் தொகை, 42 பயனாளிகளுக்கு மாதம்தோறும் ரூபாய் ஆயிரம் பெறும் உதவித்தொகை ஆணை, 10 பயனாளிகளுக்கு புதிய குடும்ப அட்டைகள், 12 பயனாளிகளுக்கு பட்டா மாறுதலுக்கான ஆணைகள், வேளாண்மைத்துறை சார்பில் ஐந்து பயனாளிகளுக்கு ரூபாய் 62,307 மதிப்பீட்டில் நலத்திட்ட உதவிகள், தோட்டக்கலைத்துறை சார்பில் இரண்டு பயனாளிகளுக்கு ரூபாய் 300 மதிப்பீட்டில் நலத்திட்ட உதவிகள், தமிழ்நாடு ஊரக வாழ்வாதார இயக்கம் சார்பில் மூன்று பயனாளிகளுக்கு தலா 10,000 நிதி என 130 பயனாளிகளுக்கு ரூபாய் 16.31 லட்சம் மதிப்பீட்டில் நலத்திட்ட உதவிகளை மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் வழங்கினார்.

முன்னதாக, மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் பேசியதாவது :-

கிராமப்புறங்களின் வளர்ச்சிக்காக தமிழ்நாடு அரசின் சார்பில் பல்வேறு திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகிறது. தமிழ்நாடு அரசின் குடிமராமத்து திட்டம் மற்றும் பல்வேறு சீரிய திட்டங்களால் நடப்பு பருவத்தில் சிறந்த முறையில் நெல் விளைச்சல் ஏற்பட்டு, நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் மூலம் இதுவரை சுமார் 30,000 விவசாயிகளிடமிருந்து 1.50 லட்சம் மெட்ரிக் டன் நெல் கொள்முதல் செய்யப்பட்டு, சுமார் 250 கோடி ரூபாய் விவசாயிகளின் வங்கிக் கணக்கில் வரவு வைக்கப்பட்டுள்ளது. சுத்தம் சோறு போடும் என்ற பழமொழிக்கேற்ப பொதுமக்கள் தங்கள் கிராமங்களை சுத்தமாக வைத்துக் கொள்ள வேண்டும். நீர்நிலைகளை தூய்மையாக பராமரிக்க வேண்டும். பொதுமக்கள் தங்கள் பிள்ளைகளை கட்டாயம் பள்ளிக்கு அனுப்ப வேண்டும்.

இவ்வாறு மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் பேசினார்.

தொடர்ந்து, இஞ்சிக்கொல்லையைச் சேர்ந்த சிங் - காமாட்சி எனும் தம்பதியர் கேட்டுக் கொண்டதன் பேரில், அவர்களது இரண்டு மாத பெண் குழந்தைக்கு வள்ளி என மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் பெயர் சூட்டினார்.

மக்கள் நேர்காணல் முகாம் நிகழ்ச்சியில் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குனர் திரு.பழனி, கும்பகோணம் வருவாய் கோட்ட அலுவலர்(பொறுப்பு) திரு.செல்வராஜ், வட்டாட்சியர் திரு.பாலசுப்ரமணியன், திருவிடைமருதூர் நிலவள வங்கி தலைவர் திரு.அசோக் குமார், திருவிடைமருதூர் ஊராட்சி ஒன்றியத் தலைவர் திருமதி.சுபா, மாத்தூர் தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கி தலைவர் திரு.முத்துகிருஷ்ணன், இஞ்சிக்கொல்லை ஊராட்சிமன்றத் தலைவர் திரு.சந்திரகுமார், அரசு அலுவலர்கள் மற்றும் பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

---

செய்தி வெளியீடு: செய்தி - மக்கள் தொடர்பு அலுவலர், தஞ்சாவூர்.